பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 4-00

# முரசொலி

முரசு 04 ஒலி 276 வெள்ளி 16-11-1990 (ஐப்பசி 30) ந. ஆகிர் 27

## யாழ் பல்கலைக்கழகத்தில் 'ராக்கிங்' முயற்சி துணைவேந்தர் மாணவர்களுக்கு எச்சரிக்கை

அநாகரிகச் செயல், மாணவர் சமுதாயத்துக்கு ஒவ்வாதது என வர்ணிக்கப்பட்டு, மீறினால் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று எச்சரிக்கை செய்யப்பட்டுள்ள போதும். அதே ராங்கிங் ''வெகு ஜோராக'' நடந்தேறிக் கொண்டுதான் இருக்கிறது. யாழ் பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் நிகழ்ந்த இச்செயல் பற்றி அறியவந்துள்ளதாவது: கைலாசபதி அரங்கின் சமீபமாக ஒரு மாணவர் கும்பல் மாணவிகளின் கரங்களைப் பிடித்து இழுத்து, எங்கே பாட்டுப் பாடுங்கள், அல்லது நடனமாடுங்கள், என்று வற்புறுத்தியது. மிரட்சியடைந்த அம்மாணவிகளை மிரட்டி அக்கும்பல் பணம் வசூலித்துக் கொண்டது. அநாகரிகமிக்க இச் செயற்பாடுகள் முளையிலேயே கிள்ளப்பட்டாக வேண்டுமென சூழலில் நின்றோர் பேசிக்கொண்டனர். இதேசமயம் யாழ் பல்கலைக்கழகத்தில் 'ராக்கிங்' முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதனைமீண்டும் தெட்டத்தெளிவாக வலியுறுத்த 4-ம் பக்கம் பார்க்க

# காரைநகர் முகாமிலிருந்து படையினர் வெளியேற முயற்சி

## புலிகளின் எதிர்த்தாக்குதலால் படையினர் முகாம் திரும்பினர்

நேற்றுக் காலை காரைநகர் கடற்படை முகாமில் இருந்து வெளியேற முயன்ற படையினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலைத் தொடுத்து அவர்களைப் பின்வாங்கச் செய்தனர்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் காரைநகர் கடற்படை முகாமிற்குப் பின்புறமாகவுள்ள சீ-நோர் கட்டிடத்தில் இருந்த படையினர் டிப்போச் சந்தியை நோக்கி முன்னேற முயன்ற போது, சங்கரப்பிள்ளை கட்டிடத்தில் இருந்து 30 யார் தூரத்தில் வைத்துப் புலிகள் எதிர்த் தாக்குதலை ஆரம்பித்தனர்.

இப்பகுதியில் மோதல்கள் நாலரை மணிநேரம் நீடித்தன இதில் 6 ராணுவத்தினர் புலிகளின் மிதி வெடியில் சிக்கி காலிழந்தனர். மேலும் ஆறு சிப்பாய்கள் பலியாகியும் பதினைந்திற்கும் மேற்பட்டோர் படுகாயமும் அடைந்தனர். புலிகள் தரப்பில் லெப். சுபராஜ் (நவரத்தினம் பரஞ்சோதி காரைநகர்) வீரமரணமடைந்தார்.

ராணுவத்தினரிடம் இருந்து ஏ.கே. எல் எம். ஜி. ரம் மகஸின் -4, ஏ.கே. எல். எம்.

—04 ஆம் பக்கம் பார்க்க

## படையினரின் ஷெல் தாக்குதல் பொதுமக்கள் 4 பேர் பலி

காரைநகர் முகாமில் இருந்து நேற்று குடியிருப்புகளை நோக்கி கண்மூடித்தனமாக ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

ஷெல்கள் காரைநகர் யாழ்ரன் கல்லூரிக்கு அருகிலும் கருங்காலி ஆலடிப்பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்தன. இதனால் ஐயாத்துரை பராசக்தி (45), சின்னத்துரை தவமலர்(23), தில்லைநாதன் நாகதர்ஷினி(04), சதாசிவம் செல்வராணி(17) ஆகியோர் உயிரிழந்தனர்.

தி. முருகதாஸ் (09), தி. செல்லம்மா (33), த. சரோஜினிதேவி(16), மா. ரவிக்

—04 ஆம் பக்கம் பார்க்க

## கிளப்பன்பேர்க் அகதி முகாமில் மேலும் சிலர் ராணுவத்தால் கைது

கடந்த திங்கள் சீனன்குடா கிளப்பன் பேர்க் அகதி முகாமில் இருந்து மேலும் சில தமிழ் மக்கள் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

ஆலங்கேணியைச் சேர்ந்த சுந்தர். நாதன், சின்னையா, கொப்பிளார், நெல்லிநாதன், கனகசிங்கம் ஆகியோரும் பன்குளத்தைச் சேர்ந்த கனகலிங்கம், சித்திரபாலர், அரியன், கண்ணம்மா ஆகியோருடன் இரு குழந்தைகளும் ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## பாவற்குளம் முகாம் மீது அருள் 89

நேற்று முன்தினம் வவுனியா மாவட்டம் பாவற்குளம் முதலாம் யூனிற் ராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் அருள் 89

—04ஆம் பக்கம் பார்க்க

## தமிழ்ப் போராளிகள் விடுதலைக்கு இந்திய அட்மிரல் கண்டனம்

கடந்த இருமாதகாலமாக இந்தியக் கடற்படையினால் கைது செய்யப்பட்ட இலங்கைத் தமிழ்ப் போராளிகளை தமிழக அரசு எந்தக் காரணமும் இன்றி விடுதலை செய்து விடடது என இந்தியாவின் கடற்படைத்தளபதியாகபதவி ஏற்கவுள்ள அட்மிரல் ராம்தாஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

நூற்றுக்கும் மேற்பட்ட போராளிகள் கைது செய்யப்பட்டு சில தினங்களுக்குள்ளாகவே விடுவிக்கப்பட்டிருப்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வரணியில் நேற்றுக் காலை விமானத் தாக்குதல்கள்

நேற்றுக்காலை ஆறு மணி முதல் ஏழரை மணிவரை கொடிகாமம் வரணிப் பகுதியில் கடும் வான் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மூன்று பொம்மர்கள், ஒரு அவ்ரோ விமானம், ஹெலிஹொப்டர் ஒன்று ஆகியன சேர்ந்து ஏககாலத்தில் தாக்குதல்களை மேற்கொண்டன, இத்தாக்குதலின் போது பல பீப்பாய்க் குண்டுகளும் அவ்ரோ விமானத்திலிருந்து வீசப்பட்டன.

இதனால் ஏற்பட்ட சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள

## சார்க் உச்சி மாநாட்டில் ஜனாதிபதி கலந்துகொள்ளார்

அடுத்த வாரம் ஆரம்பமாகவுள்ள சார்க் உச்சி மாநாட்டிற்கு இலங்கையின் சார்பில் தூதுக்குழுவொன்றே கலந்து கொளளவுள்ளது. ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு உள்ளூரில் பலமுக்கிய அலுவல்கள் இருப்பதால் அவரால் மாநாட்டில் கலந்துகொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளதாக பாதுகாப்பு இணையமைச்சர் ரஞ்சன் விஜயரட்ன நேற்றுத் தெரிவித்தார்.

இதே வேளை சார்க்கின்

—04 ஆம் பக்கம் பார்க்க

## பூந்தோட்டத்திற்கு அப்பால் செல்ல பாஸ் பெறுதல் வேண்டும்

வவுனியா பூந்தோட்டம் பகுதிக்கு அப்பால் செல்லும் எவரும் விடுதலைப் புலிகளிடம் பாஸ் பெற்றே செல்ல வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிவித்துள்ளது.

பிரதேசப் பொறுப்பாளர்களிடம் தகுந்த ஆவணங்களை சமர்ப்பித்து பாஸ் பெற்றுக்கொள்ளமுடியும் என தெரிவிக்கப்படுகிறது.

## தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரியில் நேர்முகப்பரீட்சை

தொண்டர் ஆசிரியரை நிரந்தரமாக்குவதற்கான நேர்முகப்பரீட்சை யாழ் மாவட்டத்தில் ஜனவரி மாதம் நடைபெறவுள்ளது,

இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் தற்பொழுது கடமைபுரியும் 24000 தொண்டர் ஆசிரியர்களில் 12000 பேர்நிரந்தர ஆசிரியர்களாகச் சேர்த்துக்கொளளப்படுவர்.

யாழ் மாவட்டத்தில் சுமார் 800 தொண்டர் ஆசிரியர்

—04 ஆம் பக்சம் பார்க்க

## அரசாங்க அதிபர் திரும்பியதும் பணப்பிரச்சினை ஓரளவு தீரும்

இன்று காலை விங்கோ றேட்டர் கப்பல் மூலம் பருத்தித்துறையை வந்தடையும் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் கடந்த பல மாதங்களாக வேதனமின்றி பல கஷ்டத்திற்கும் உள்ளான பல திணைக்களங்களையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள்,

—04ஆம் பக்கம் பார்க்க

அம்பாறை சென்ரல் காம்பில்

## ஆறு காவலரண்கள் மீது தாக்கு பல ஆயுதங்களும் மீட்பு

நேற்று அதிகாலை அம்பாறை மாவட்டத்தில் சென்றல் காம்ப் பகுதியில் உள்ள ராணுவ முகாம் ஒன்றின் 6 காவலரண்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

நேற்று அதிகாலை 2.30 மணியாளவில் அம்பாறை 12 ஆம் கொலனியில்அமைந்த ராணுவ முகாம் ஒன்றின் 6 காவலரன்கள் மீது புலிகள் ஏககாலத்தில் தாக்குதலை ஆரம்பித்தனர். சில மணிநேர தாக்தலைத் தொடர்ந்து அனைத்து காவலரண்களும் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் காவலரண்களுக்குள் இருந்த ராணுவத்தினர் தப்பியோடி முகாமிற்குள் சென்றுவிட்டனர். மோதலில் 3 சிப்பாய்கள் பலியானார்கள்

ஆறுகாவலரண்களில்இருந்து விடுதலைப் புலிகளால் 60

—04ஆம் பக்கம் பார்க்க

# சிறிய செய்திகள்

## காவலூர் மாணவருக்கு அழைப்பு

ஊர்காவற்றுறையில் இராணுவக் கெடுபிடிகளால் முடப்பட்டுக்கிடக்கும் பாடசாலைகளில் கல்வியைக் கற்று வந்த க. பொ. த. சாதாரண வகுப்பு மாணவர்களில் இவ் வருட க. பொ. த. (சா. த) பரீட்சை எடுக்க விருக்கும் அனைவரும் உடனடியாக தங்கள் தங்கள் கல்லூரி அதிபர்களை இம் மாதம் 18-ம் திகதிக்கு முன் சந்திக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் அதிபர்கள் கேட்டுள்ளனர். (19)

## கோர விமான விபத்து

சூரிச் விமான நிலையத்தருகே நிகழ்ந்த விமான விபத்தில் 40 பேர்வரை இறந்திருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

## சேமிப்பு வட்டி வீதம் அதிகரிப்பு

தேசிய சேமிப்பு வங்கி, சேமிப்பு, நிலையான வைப்புக் கணக்குகள் மீதான வட்டி வீதங்களை அதிகரித்துள்ளது.

சேமிப்பு வைப்புகளுக்கு ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் இரண்டு வீத வட்டியும் 12 மாத நிலையான வைப்புகளுக்கு (முதிர்வில்) ஆண்டொன்றிற்குப் பதினேழு சத வீத வட்டியும், 24 மாத நிலையான வைப்புகள் (முதிர்வில்) ஆண்டொன்றுக்கு பதினெட்டு தசம் ஐந்து சத வீத வட்டியும் வழங்கப்படவுள்ளது.

சேமிப்புக் கணக்குகள், நிலையான வைப்புகள் மீதான புதிய வீதங்கள் இவ் வாண்டு ஆடி மாதம் தொடக்கம் அமுல் செய்யப்பட்டு இருப்பதாகத் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் சகல அஞ்சல் அதிபர்களுக்கும், உப அஞ்சல் அதிபர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார். (18)

## படிவங்களுக்கு பலத்த தட்டுப்பாடு

வட பகுதியிலுள்ள அஞ்சல் அலுவலகங்கள், உப அஞ்சல் அலுவலகங்களில் நாளாந்த பாவனைப் படிவங்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

நாரஹேன்பிட்டி அஞ்சல் திணைக்கள படிவ களஞ்சியத்திலிருந்து கடந்த பங்குனி மாதத்திற்குப் பின் படிவங்கள் அனுப்பி வைக்கப்படாத காரணத்தினால் நாளாந்தப் பாவனையிலுள்ள கணக்குப் புத்தகம், கணக்குத்தாள், வழிப்பட்டியல், கடிதப்பட்டியல் ஆகியன இல்லாமையினால் அலுவலக பொறுப்பு உத்தியோகத்தர்கள் மிகுந்த சிரமமடைகின்றனர். சில தேவைகளுக்கு முன்னர் பாவித்த படிவங்களின் மறு பக்கம் உபயோகிக்கப்படுகிறது. (18)

## யாழ்-வவுனியா பஸ் கட்டணம் அதிகரிப்பு

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கான பஸ் கட்டணம் நேற்று முதல் 1000 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக யாழ்-வவுனியா பஸ் கட்டணமாக 800 ரூபாவே வடபிராந்திய மினிபஸ் சேவைச் சங்கத்தினால் அறவிடப்பட்டு வந்தது தெரிந்ததே. (74)

## தபால்கள் சென்றன

கிளிநொச்சி, பரந்தன் தபாற் கந்தோர்களிலிருந்து உள்ளூரில் சேகரிக்கப்பட்ட தபால்கள் தரைமார்க்கமாக கொழும்புக்கு அனுப்பப்பட்டன.

பதினைந்து பொதிகளில் இவை செஞ்சிலுவைச் சங்க வாகனத்தில் வவுனியாவுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து யாழ் தேவி ரயில் மூலம் கொழும்பு சென்றடையும்.

இதேபோல கொழும்பிலிருந்து வரும் தபால்களும் ரயில் மூலம் வவுனியா வந்து அங்கிருந்து வாகன மூலம் இங்கு வரவுள்ளது. (ப 6)

## பங்களாதேஷில் இரு இலங்கையருக்கு மரண தண்டனை

போதைப் பொருள் கடத்திய இரு இலங்கையர்களுக்கு பங்களாதேஷில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது

இந்த இரு இலங்கையர்களும் டாக்கா விமான நிலையத்தில் 1987-ம் ஆண்டு இரண்டுகிலோ போதைப் பொருளைக் கடத்த முற்படுகையில் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

மூன்று வருடகாலமாக இடம் பெற்ற நீதிமன்ற விசாரணைக்குப் பின்னர் இவர்களுக்குத் தற்பொழுது மரண தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறது.

## விபரம் சேகரிப்பு

குவைத்திலிருந்து யாழ் மாவட்டம் திரும்பியுள்ளோரின் விபரங்கள் தற்போது யாழ் செயலகத்தினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

குவைத்திலிருந்து திரும்பிய சிலர் யாழ் செயலகத்திற்குச் சென்று தமது நிலையை விளக்கி தமக்கு நிவாரணம் பெற்றுத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதனையடுத்தே விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுமாறு யாழ் பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் தனது உத்தியோகஸ்தர்களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஆனால் எவ்வாறான நிவாரணம் எப்போது வழங்கப்படும் என்பதைத் தற்போது தீர்மானிகக முடியாதெனவும் இதுபற்றி தாம் ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார். (66)

## க. பொ. த (சா. த) பரீட்சைப் படிவம் வந்துசேரவில்லை

க பொ. த (சா. த) விண்ணப்பப்படிவங்கள் பல பாடசாலைகளுக்கு இன்னமும் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

இப்படிவங்களைப் பரீட்சைத் திணைக்களத்திலிருந்து விரைவில் பெறுவதற்கு யாழ் கல்வித்திணைக்களம் உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

## விண்ணப்பங்கள் அனுப்பப்படவில்லை

பயிற்சி ஆசிரியர்களுக்கான தொழிற் கல்விப் பயிற்சிக்கு விண்ணப்பிக்குமாறு வர்த்தமானி மூலம் கோரப்பட்டிருந்த போதிலும், குறிப்பிட்ட விண்ணப்பத் திகதிக்குப் பின்னரே வர்த்தமானி இங்கு கிடைத்ததாலும், விண்ணப்பப் பத்திரத்தை அனுப்புவதற்கான முத்திரைகள் இல்லாததினாலும் ஏராளமானோர்கள் இப்பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (19)

## இராணுவம் களஞ்சியத்தைச் சேதப்படுத்தியது;

# வவுனியாவில்சேமித்துவைத்திருந்த ஒரு லட்சம் கிலோ நெல் நாசம்!

வவுனியாவில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையினால் ஒரு லட்சத்துப் பத்தாயிரம் கிலோ நெல் நாசமடைந்துள்ளது.

இராணுவ நடவடிக்கையின் போது வவுனியா நெற்களஞ்சியம் பாதிக்கப்பட்டதையடுத்து மழை நீர் உட்சென்றதால் களஞ்சியத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த மேற்படி நெல் நாசமடைந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

களஞ்சியத்தில் பழுதடைந்திருக்கும் பெருந்தொகையான நெல் மூடைகளை அப்புறப்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் அவசர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (38)

## போர்க்கால பஜனை வழிபாடு

தமிழ் மக்களின் சுபிட்சத்திற்காக திருமறைக்கலாமன்றத்தினரினால் இம் மாதம் 21-ம் திகதி பாஷையூர் புனித அந்தோனியார் தேவாலயத்தில் பஜனை வழிபாடு ஒன்று நடாத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (ப-17)

## அதிர்ஷ்டம் பெறப் போகும் அந்தச்சிசு, தாதி யாரோ?

கைதடி அரசினர் ஆயுர்வேத போதனா வைத்திய சாலையில் திறக்கப்பட்ட பிரவச விடுதியில் பிறக்கப் போகும் முதலாவது குழந்தைக்கும், அந்த பிரசவத்தைப் பார்க்கின்ற தாதிக்கும் பரிசு வழங்கப்போவதாக மட்டுவில் சித்த வைத்தியர் கலாநிதி பி. பிலிப்ஸ் அறிவித்துள்ளார்.

இந்தப் பரிசுக்குரிய அதிர்ஷ்டக் குழந்தையும், தாதியும் யார் என்பதை அறிய வைத்தியசாலை வட்டாரங்கள் ஆவலுடன் இருக்கின்றன.

இப்பிரசவ விடுதி திறப்பு விழா வைபவத்தின்போது விடுதலைப் புலிகளின் தென்மராட்சி சுகாதாரப் பிரிவுப் பொறுப்பாளர் சேகர் அத்தியாவசிய மருந்துகள் அடங்கிய இரண்டு பொட்டலங்களை வைத்திய சாலைக்கு அன்பளிப்புச் செய்தார். (ப5)


## University of Jaffna

Applications will be received by me from suitable candidates for the following post up to 21st November, 1990.

**Post:**

Casual Nurse

**Salary:**

Rs. 83.40Cts. + other allowances payable by the University.

**Qualifications:**

1. G. C. E. (O/L) Examination in six subjects at not more than two sittings with credit passes in three subjects.
2. Certificate of Competenance as a Nurse recognized by the Sri Lanka Medical Council.

**Age:**

Not more than 40 years.

**Note:**

Contract appointments will be considered.

Applicants are requested to apply together with their Bio-datas. Qualified applicants are also requested to present for an Interview scheduled to be held on 23rd November 1990 at 10.00 a.m. in the Board Room of this University.

REGISTRAR

University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
1990 . 11 . 14

11077



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

## விவசாயபீடம் - கிளிநொச்சி

விவசாயபீட முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் 1990 டிசம்பர் 3 ஆம் தேதி திங்கட்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பமாகும். முதலாம் ஆண்டு மாணவர்கள் அனைவரும் 1990 டிசம்பர் 2 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியிலுள்ள விவசாய சேவைக்காலப் பயிற்சி நிலையத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

துணைவேந்தர்

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
15.11.1990.

11080



## 31-ம் நாள் நினைவு தினம்

அன்னை மடியில்:
17
□
02
□
1954



ஆண்டவன் பிடியில்:
16
□
10
□
1990

அமரர்

### திரு. வே. அருளம்பலம் (அருள்)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

அன்பு மனைவி, பிள்ளைகள், ஐயா,
அத்தான்மார், சகோதரிகள்,
உறவினர்கள், நண்பர்கள்.

11076

பேராசிரியர் சிவஞானசுந்தரம் கவலை

# மருத்துவத்துறையில் தமிழர் எண்ணிக்கை அருகி வருகிறது!

"மருத்துவத்துறையில் ஒருகாலத்தில் ஐம்பது வீதத்திற்கு மேற்பட்டோர் தமிழராக இருந்தனர். ஆனால் அப்பெருமையான சூழ்நிலை இன்று இல்லையே" இப்படிப் பேராசிரியர் சிவஞானசுந்தரம் (நந்தி) தம் வேதனையை வெளிப்படுத்தினார்.

"இன்று எமது போதனா வைத்தியசாலையில் போதிய மருத்துவர்கள் இல்லாமையால் மருத்துவ பீடத்தை மூடுவதா விடுவதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்" என்றும் அவர் சொன்னார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற கைதடி ஆயுர்வேத போதனா வைத்தியசாலையின் பிரசவ விடுதித் திறப்பு விழாவில் அவர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"மகப்பேற்றிலே இரு உயிர்கள் உண்டு. ஒன்று தாய், மற்றது சேய். ஏனைய நோய்களைப் பொறுத்தவரை ஒருயிர் மாத்திரமே. மகப்பேற்றின்போது தாய் இறப்பின் அது அந்த சமூகத்தினது பொருளாதார, சுகாதார நிலையினைப்பிரதிபலிக்கும்" என்றும் அவர் கூறினார்.

"சித்த வைத்தியத்தில் குழந்தை பிறப்பதற்கு முன்னரே ஆண் குழந்தையா அல்லது பெண் குழந்தையா எனக் கூறிவிட முடியும்" என்று இவ்விழாவில் பேசுகையில் சித்த ஆயுர்வேத வைத்திய கலாநிதி கே. இராமசாமி கூறினார்.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். பவானி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

பதில் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் பரமசிவம் பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.துரைராஜா, டாக்டர் நச்சினார்க்கினியர், விஞ்ஞானப் பீடாதிபதி பேராசிரியர் கணேசலிங்கம், கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் உட்பட மற்றும் பலரும் பேசினர். (ப-5-19)

இலங்கை வங்கிப் பரீட்சை;

## குண்டு வீச்சில் இறந்த வரததாசனும் சித்தி

இலங்கை வங்கியினால், இலங்கை பூராவும் உள்ள அதன் காரியாலயங்களில் பாதுகாப்பு ஊழியர்களாக கடமையாற்றுவோரைப் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்களாக பதவி உயர்த்துவதற்காக 28.10.89-ல் நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகள் சென்ற வாரம் வெளிவந்துள்ளன.

யாழ் மாவட்டத்தில் இருந்து 45 பேர் இப் பரீட்சைக்குத் தோற்றியபொழுதிலும் கி சிவராசா (ஊர்காவற்றுறை) எஸ். முருகேசு (சுன்னாகம்), ஏ சிற்சபேசன் (பருத்தித்துறை), வரததாசன் (யாழ்ப்பாணம்) ஆகிய நான்கு பேர் மாத்திரமே சித்தியடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகரில் உள்ள இரு கிளைகளில் இருந்தும் கணிசமானோர் இப்பரீட்சைக்குத்தோற்றி இருந்த பொழுதிலும் வரததாசன் என்பவர் மாத்திரமே சித்தியடைந்தார் என்பதும் துரதிர்ஷ்டவசமாக அவரும் அண்மையில் அத்தியடியில் இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சின் பொழுது பலியானார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (16)

## அனலைதீவு சூட்டுச் சம்பவத்தில் இறந்தோர் தொகை 6ஆக அதிகரிப்பு

அனலைதீவில் இருந்து அகதிகளாக இந்தியா சென்ற பொது மக்களின் படகின் மீது காரைநகர் கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் இறந்தோரின் தொகை ஆறாக அதிகரித்துள்ளது.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு நடைபெற்றுள்ளது;

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவிக்கப்படுவதாவது;

அனலைதீவில் இருந்து சுமார் 30 பேர்கள் கொண்ட பொதுமக்கள் படகொன்று இந்தியா செல்வதற்காக சென்ற போது ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த கடற்படையினர் பொது மக்களின் படகின் மீது பீரங்கித் தாக்குதல்களை மேற்கொண்டபோதே 6 பேர் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்டவர்களில் வேலணை துறையூரைச் சேர்ந்த கிளி என்று அழைக்கப்பட்ட படகோட்டியும் ஒருவராவர் என்று சொல்லப்படுகின்றது.

இறந்தவர்களின் இரு சடலங்கள் மண்கும்பானைச் சேர்ந்தவை என்றும் மற்றையவை வேலணை, சுருவில், அனலைதீவு ஆகிய இடங்களில் உள்ளவர்களது என்றும் கூறப்படுகின்றது

மண்கும்பானைச் சேர்ந்த ஒரு இளம் பெண்ணின் சடலமும் 7 வயதுடைய சிறுவனினது சடலமும் மண்கும்பானுக்கு உறவினரால் கொண்டு வரப்பட்டு தகனம் செய்யப்பட்டது. மற்றநான்கு சடலங்களையும் கடற்படையினர் கடலில் வீசி விட்டு மற்றவர்களை காரைநகர் முகாமுக்குக் கொண்டு சென்று ஒரு சிலரையும் இரு சடலங்களையும் குறிகாட்டுவான் துறைக்கு தனியார் படகில் அனுப்பி வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (19)

## யாழ் பல்கலைக்கழக விஞ்ஞானபீடப் பரீட்சை முடிவுகள்

(நேற்றைய தொடர்ச்சி)

வி. மஞ்சுளா, எம். எல். செல்வரத்தினம், எச். ஆர். அந்தோனிப்பிள்ளை, எம். ஏகாம்பரம், எஸ். ராதிகா, ஆர். பாலசிங்கம், கே இரத்தினேஸ்வரி, ரி. ரேவதி, ஆர். சபாரத்தினம், வி. எஸ் சசிகலா, எஸ். சிவரஞ்சினி, எஸ் இரத்தினம், எஸ். சுகந்தினி, ஏ சுதர்சனா, எஸ் தயாநிதி, ரி. திருமனோகரி, ஆர். உத்தரை, ஆர். வனசலோஜினி, வி. சுந்தரலிங்கம், எஸ். வாசுகிதேவி, வி. விஜயகுமாரி, எஸ் விஜிதா, கே. வைதேகி, எஸ். பிரீமினி, எம். யசோதரா சி. நிறைஞ்சலா, கே. சுமதி, கே கேமாவதி, ரி. மேகலா, டீ சி. தம்பிப்பிள்ளை, ஏ. வேலுப்பிள்ளை, ஆர். ரதிகலா, எஸ் சுதர்சனா, எஸ். நிக்கிலா, வி. சுபத்திராதேவி, ரி. சுகந்தி, எஸ். கௌரீஸ்வரி எம். ரஜனி, எஸ். அருள்நிதி, ரி ராஜரத்தினம், என். பாலசுப்பிரமணியம்.

செல்வன்கள்: என்.ஏ.நசீர், ஏ. ஏ ஆர். சுரேஷ், எம். ஏ. முகமட் போஸ், எஸ். பி. முருகதாஸ், கே பத்மநாதன், வி. பிரேமச்சந்திரம், ரி. ரவிச்சந்திரன், எஸ் சிவகெங்காதரன், ரி. சோதிரூபன், ரி. தயாபரன், எஸ் திவாகரன் வி. உமாசங்கர், டபிள்யூ. எஸ். தம்பிராசா, ஆர். மணிவாசகன், வி. சர்வேஸ்வரன், ஏ. ஏ. அமலகுமார், ஆர். இராகுலன், ஆர் பிரேமராஜ், பி. சண்முகானந்தன், ரி. தர்மானந்தன், என். தனஞ்செயன், என். யுவராஜ், எஸ். சிவனேசராசன், என். சிறீகரன், ஓ. விஜயதாசன்.


யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் இலங்கை

**கலைப்பீடம்**

**சிறப்புக்கலை வர்த்தகம் முகாமைத்துவம்**

மேற்படி பயிற்சி நெறிக்கான சகல இறுதி ஆண்டு மாணவர்களும் தமது ஆய்வுக் கட்டுரையை 30-11-90க்கு முன்பாகப் பரீட்சைக் கிளையில் சமர்ப்பிக்கவும்.

காலதாமதமாகச் சமர்ப்பித்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

பதிவாளர்.
11078



**மில்க்வைற் செய்தி**

காலமே பொன் செய்யும் மருந்து. மில்க்வைற் சலவைப் பவுடர் துரித சலவைக்கும் தூய வெண்மைக்கும் உதவுகிறது, சிக்கனமானது.

50 கிறாம் வெற்றுப் பைக்கற் 10 அனுப்பி மில்க்வைற் செய்தி இதழ் 179ஐப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற், யாழ்ப்பாணம்.
11071


முரசொலி

எமது சிந்தனை

1990 — 11 — 16 வெள்ளி

"மரத்தைப் போன்றதோர் அழகிய கவிதை
வையகம் எங்கணும் காணுதற் கரியது!
கவிதைகள் என்போல் மூடர் செய்பவை!
மரமோ இறைவன் இயற்றிய கவிதை!"
- ஜொய்ஸ் கில்மர்

## மர நடுகை

**மா**வீரர் வாரம் ஊர்தோறும் முழு அளவில் கொண்டாடப்படவுள்ளது. ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் தத்தமது அறிவு, ஆற்றல், ஆர்வம் என்பனவற்றுக்கு ஏற்ப கொண்டாட்டங்களை ஒழுங்கு செய்வதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

- நாயன்மார்கட்டு ஒரு தக்க ஞாபகச் சின்னத்தை உருவாக்குகிறது. மாவீரர் நினைவாக இரு பனந்தோப்புக்கள் அங்கு அமையப்போகின்றன. அவசியமான, பயனுள்ள, நிலைத்த முயற்சி இது.

அண்மைக் காலங்களில், வடபகுதியின் செல்வமான பனை பெருமளவில் அழிக்கப்பட்டு விட்டது. வீடு கட்டுவதற்கும், பதுங்குகுழிகளை மூடுவதற்கும் என்று ஏராளமான மரங்கள் தறிக்கப்பட்டன.

முந்திய தலைமுறை தேடிவைத்த வளத்தை இந்தத் தலைமுறை பயன்படுத்தியதோடு சரி. அடுத்த தலைமுறைக்கு எதை விட்டுச் செல்கிறோம் என்ற சிந்தனை முகிழ்த்ததாகத் தெரியவில்லை.

வறட்சிமிக்க வடபகுதிக்கு வாய்த்த கற்பகதரு பனை. அதன் பயன்கள் எண்ணில. வீடுகட்ட மரம், கிணற்றுக்குத் துலா, வேலிக்கும் கூரைக்கும் ஓலை, பாய் கடகத்துக்குக் குருத்து, பருகக் கள் - பதநீர் - நுங்கு, சுவைக்கப் பனங் கட்டி - பனாட்டு, உண்ணப் பழம், பிட்டுக்கும் கூழுக்கும் ஒடியல், மாட்டுக்கு உணவு, வயலுக்குப் பசளை எனப் பனையின் பயன் விரியும்.

இவை தவிர, மண்ணரிப்பைத் தடுப்பதிலும் காற்றுத்தடையாக வாழை முதலிய பயிர்களைக் காப்பதிலும் பனங்கூடல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த யுத்தம் தொடங்கி உணவுப் பஞ்சம் ஏற்பட்ட பொழுது, பனங்கட்டி கைகொடுத்தது தீவுப் பகுதியில் ஊரடங்கும் ராணுவக் கெடுபிடிகளும் மக்களை வாட்டியபொழுது, பனம்பழத்தைச் சாப்பிட்டு உயிர்தப்பியோர் பலர்.

நமது பிரதேசத்தின் வளமாக விளங்கும் பனையைக் கண்டபடி தறிக்கக்கூடாது என்றும் அத்தியாவசிய தேவைகளுக்கு உதவி அரசாங்க அதிபர் அனுமதி பெற்றே தறிக்கவேண்டும் என்றும் ஒருவிதி முன்பு இருந்தது. அண்மைக்காலங்களில் இது செயலிழந்து போயிற்று.

நமது மண்ணை - மண்ணின் வளத்தை— காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நம்முடையதே. ஒவ்வொரு குடிமகனும் இதை மனதிற்கொண்டு செயற்பட வேண்டும். பனையை மட்டுமல்ல—ஏனைய மரங்களையும்—எழுந்தமானத்தில் அழிக்கக்கூடாது என்ற பொறுப்புணர்ச்சி வரவேண்டும். மரங்களை அழிப்பதால் மழைவளங்குன்றும் என்பதும், மண்ணரிப்பைத் தடுக்க முடியாது போகும் என்பதும் உணரப்படவேண்டும்.

உயிர்த்தியாகம் செய்தோருக்கு அஞ்சலி செலுத்துவதற்குத் தானும், உயிருள்ள மரங்களை வெட்டாது பார்த்துக்கொள்வோமாயின், மண்ணை நேசித்த அவ் வான்மாக்கள் சாந்தியடையும்.

'ஒரு மரத்தைத் தறிக்கும் இடத்தில் ஒரு மரக்கன்றை நடுவோம்!' என்பதை விதியாக—வேதமாக—கொள்வோம்; விடிவு காண்போம்!

இன்னொன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். பல ஆண்டுகளாக நம் வீதிகள் பராமரிப்பற்றுக் கிடக்கின்றன. இந் நிலையில் வீதிகளில் குழிதோண்டிக், கம்பங்களை நடுபவர்கள் அவற்றை அகற்றும் போது குண்டு குழிகளை மூடிவிட வேண்டும். தவறின், வீதிகள் பழுதாகி விபத்துக்கள் அதிகரிக்கும்.

### றெட்பானா, சிறுவர் பராமரிப்பு நிதியம்

# இரு தொண்டர் நிலையங்களுக்கு வடக்கில் இம்மாதம் மூடுவிழா

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக வறுமையால் வாடிய மக்களுக்கு சத்துணவுத்திட்டத்தின் மூலம், போஷாக்கினை வழங்கிய றெட்பானா ஸ்தாபனமும், சிறுவர் பராமரிப்பு நிதியமும் தங்களது மேற்படி செயற்பாடுகளை நவம்பர் மாதத்துடன் நிறுத்திக் கொள்வதெனத் தீர்மானித்துள்ளன.

யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் இத் திட்டத்தின் செயற்பாட்டுக்காக சுமார் 90 நிலையங்களைப் பராமரித்து, நிர்வகித்து வந்த இத் தாபனங்கள், இதன் முன்னோடி நடவடிக்கையாக 50 நிலையங்களைக்கடந்தமாதத்துடன் நிறுத்திக் கொண்டன. மிகுதியான நிலையங்களும் இம்மாத இறுதியுடன் நிறுத்தப்படவுள்ளன.

அண்மைக்கால அசம்பாவிதங்களால் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கியிருப்போருடைய தேவைகளைக் கவனிப்பதற்காகவே மேற்படி நிலையங்கள் மூடப்படவுள்ளன என்று தெரிகிறது.

நாட்டின் நிலை வர வர திருப்திகரமற்றதாக இருப்பதால் அகதி முகாம்கள் தொடர்ந்தும் இயங்கவேண்டியிருக்கும்.

போஷாக்குக் குறைந்த பிள்ளைகளுக்குப் போஷாக்கினை ஏற்படுத்த வேண்டிய அத்தியாவசியம் நிறைந்த இவ் வேளையில் இந்த நிலையங்களை மூடுவது கஷ்டமான பெற்றோருக்கு மிகுந்த கவலையளிப்பதாயுள்ளது.

இதனால் இத் திட்டத்தில் பணியாற்றிய பலர் வேலையிழக்கும் நிலையும் உருவாகியுள்ளதாகத் தெரிகிறது. (47)

### யாழ் செயலகத்தில் சமூகசேவைப்பகுதியினால்

## காசநோய், புற்றுநோய், தொழுநோய் குறித்த மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த காசநோய், புற்று, நோய், தொழுநோய்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுவோர் யாழ். சமூக சேவைப் பிரதிப்பணிப்பாளரை அவரது செயலகப் பணிமனையில் சந்திக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

அரியாலை, நாவாந்துறை பெரியகடை, ஆஸ்பத்திரி வீதி, குருநகர், ஆனைப்பந்தி, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம், அத்தியடி, வண்ணார் பண்ணை, சோனக தெரு, நீராவியடி முதலான 12 தபாற்கந்தோர்களிலும் மேற்படி கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வோருக்கே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

1990 யூன், யூலை மாதங்களுக்கான மேற்படி கொடுப்பனவுகள் யாழ்ப்பாணம் உதவிஅரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய அரசாங்க அதிபர் பிரிவுகளில் வழங்கப்பட்டு வருகின்றன.

இதற்கான பணத்தை யாழ் உதவி அரசாங்க அதிபர் பெற்றுக்கொள்ளாமையாலேயே யாழ்ப்பாணப் பிரிவு மக்களுக்கு இக்கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (47)

## சந்திரசேகருக்கு நம்பிக்கைத் தீர்மானம் ஆதரவாக இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள்



இன்று லோக்சபாவில் இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகர் மீதான நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வரப்படவுள்ளது.

இந் நம்பிக்கைத் தீர்மானத்தில் தாம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து நேற்று புதுடில்லியில் பல கட்சிகளும் கூடி ஆராய்ந்தன.

இதேவேளை எதிர்பார்த்ததைப் போன்றே சந்திரசேகருக்கு ஆதரவாக இந்திரா காங்கிரஸ் கட்சியும் அதன் தோழமைக் கட்சிகளும் வாக்களிக்கும். எதிராக ஜனதாதள், இடதுசாரிகள், பாரதீய ஜனதாக்கட்சி என்பன வாக்களிக்கும்.

வாக்களிப்பில் இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் அனைவரும் சந்திரசேகருக்கு ஆதரவாக வாக்களிக்கக்கூடிய சாத்தியம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிழக்கிலிருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர் வடக்கில் வேலை தருமாறு கோரி மகஜர்

கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து வடக்கிற்கு வந்துள்ள எல்லா அரச ஊழியர்களையும், யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்களங்களில் வேலை செய்ய அனுமதிக்க வேண்டுமெனவும், இல்லையேல் முழுச் சம்பளத்துடன் விசேட விடுமுறை வழங்க வேண்டும் எனவும், கிழக்கு மாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்த அரசாங்க, கூட்டுத்தாபன, தனியார்துறை ஊழியர்கள்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்று மேற்படி சங்கத்தினால் ஜனாதிபதி, புனர்வாழ்வு அமைச்சு செயலாளர், ஐக்கிய நாடுகள் தொழிற்பிரிவு, சர்வதேச தொழிலாளர் அமைப்பு, கிழக்கு மாகாண திணைக்கள கூட்டுத்தாபனத் தலைவர்கள் மற்றும் சகல அமைச்சுக்களுக்கும் கையளிப்பதற்காக நேற்றுக்காலை ஊர்வலமாக எடுத்து வரப்பட்டு யாழ் செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் விசேடமாக ஒதுக்கப்படும் நிதியிலிருந்து சகல அரசாங்க உள்ளூராட்சி மற்றும் பொதுத்துறை கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் அவர்களது சம்பளங்களை வழங்க வேண்டுமென யாழ் அரச அதிபருக்கு பணிக்க வேண்டுமெனவும் யாழ்ப்பாணத்திற்கும் கிழக்கிற்கு மிடையிலான போக்குவரத்து, தொலைத்தொடர்பு சேவையை மீட்க வேண்டுமெனவும் இந்த மகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

இம் மகஜரைப் பெற்றுக் கொண்ட யாழ் பதில் அரச அதிபர் திரு. கே. சண்முகநாதன் பதிலளிக்கையில், இன்று கொழும்பிலிருந்து யாழ் திரும்பும் அரசாங்க அதிபரிடம் இதனைக் கையளிப்பதோடு உங்களின் நியாயபூர்வமான கோரிக்கைகளையும் இங்குள்ள நிலைமைகளையும் விளக்கி தங்கள் மகஜர்கள் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தெரிவித்தார், (47, 74, 66)

**யாழ் பல்கலைக்...**

விரும்புகின்றேன், தற்போதைய போர்க்காலச் சூழலில் இத்தகைய இழிசெயலில் ஈடுபடுவோர் கண்டிப்பாகவீட்டுக்கு அனுப்பப்படுவர்.''

என் நேற்று பல்கலைகழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. துரைராஜா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

**தமிழ்ப்...**

பதாகத்தமக்குதகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்களை ஸ்ரீலங்கா கடற்படையினர் தாக்குவது குறித்து வெளியிட்ட அட்மிரல் ராம்தாஸ் தமிழக மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்வதே இந்நிலைக்குக்காரணம் எனக் குறிப்பிட்டார்.

**காரைநகர்...**

ஜி. ரவை- 150, கிட்பாக் என்பன புலிகளால் மீட்கப்பட்டன.

புலிகளின் கடும் தாக்குதலையடுத்து முன்னேற முடியாத ராணுவத்தினர் கொல்லப்பட்ட, காயமடைந்த தமது சகாக்களைத் தூக்கிக் கொண்டு முகாமிற்குப் பின்வாங்கிச் சென்றனர்.

காயமடைந்த படையினர் படகுகள் மூலம் ஊர்காவற்றுறைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து ஹெலிகொப்டர்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டனர். (ப 31)

## யாழ் ஆஸ்பத்திரியில் இரத்தம் சேமிக்க முடியாது

யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் இரத்தம் சேமித்து வைக்க முடியாதுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மின்சார வசதிகள் சீராக இன்மையே இதற்குக்காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அவசரமாக இரத்தம் தேவைப்படும் நோயாளர்களுக்குத் தொண்டர்கள் மூலம் உடனடியாகவே இரத்தம் பெறவேண்டியுள்ளது.

இதேவேளை நோயாளருக்கான படுக்கை விரிப்புகளுக்கும் மருந்து கட்டுவதற்கான துணிவகைகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுவதாகவுந் தெரிவிக்கப்படுகிறது. (70)

## வயாவிளான் கன்னியர்மடம் அச்சுவேலிக்கு இடம் மாறுகிறது

வயாவிளான் - வடமூலையில் அமைந்துள்ள கன்னியர் மடக் கன்னியாஸ்திரிகள் தமது மடத்தைவிட்டு அச்சுவேலி அமலிவனத்துக்கு இடம் பெயரத்தொடங்கிவிட்டனர்.

வயாவிளான் பகுதியில் இருந்து ஏவப்படும் ஷெல் குண்டுகளில் சில மடத்துக்கு அருகில் விழுகின்றதனால் தமது பாதுகாப்புக்கருதி இவ்வாறு இவர்கள் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இராணுவம் வயாவிளானுக்குச் சென்றபோது இம்மடத்தைச் சோதனையிட்டு கன்னியாஸ்த்திரிகளிடம் அங்கேயே தங்குமாறும், தாம் தாக்காது பாதுகாப்பளிப்பதாகவும் கூறியதுடன், எக்காரணம் கொண்டும் அங்கு வேறுயாரும் வந்து தங்கக் கூடாதெனக் கண்டிப்பான உத்தரவிட்டும் சென்றது தெரிந்ததே. (32)

### வீரமரணம்

விபத்தில் சிக்கிய போராளிகளான கண்ணன் (நாராயணசாமி செல்வகிருஷ்ணர் - சுழிபுரம்), அமலன் செல்வராசா கேதீஸ்வரன் - ஆனைக்கோட்டை) ஆகியோர் வீரமரணமடைந்தனர்.

காங்கேசன்துறை மோதல் சம்பவத்தில் மூஸ்தபா (கிட்ணர் சந்திரசேகரன்-புத்தூர்) வீரமரணமடைந்தார்.

### நாளை கூட்டம்

யாழ் மாவட்ட சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச நிர்வாக சபைக் கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு நீர்வேலியில் உள்ள அதன் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும்.

இயக்குனர் சபை அங்கத்தவர் அனைவரையும் சமூகம் தரும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கூட்டுறவுத் துறையினர் கேட்டுள்ளனர். (66)

**அரசாங்க..**

ஊழியர்களின் துயர்துடைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சகல திணைக்களங்கள், வங்கிகள் என்பனவற்றிற்குத் தேவையான சம்பளப்பணமும் இக்கப்பலில் கொண்டுவரப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (66)

**ஆறு..**

எம் எம் மோட்டார்-1, ஷெல் I, பராஷெல்- 5, எஸ். எல். ஆர்- 1, 84 எஸ்- I-1, இரவுப் பார்வை சாதனம்-1, தொலைநோக்கி- 1 ஏ. கே மகஸின்- 3 ஐ எம். ரவை- 1600, நேட்டோ ரவை- 125, ஏ. கே. கோல்ஸர்- 3, 5. 56 ரவை- 146, ஜே. ஆர் குண்டு- 1 ராணுவபெல்ற் 3, ஒருசோடி சப்பாத்து, தொப்பி- 5, கிற்பாக்-1, ஹெல்மட்-5. என்பன மீட்கப்பட்டுள்ளன.

**பாவற்குளம்...**

ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர், எனினும் சேதவிபரம் தெரிவிக்கவில்லை.

**தொண்டர்...**

கள் நேர்முகப்பரீட்சையின் அடிப்படையிலும், சேவைமூப்பு அடிப்படையிலும் நிரந்தரமாக்கப்படுவர். இவர்களுக்கு உடனடியாகவே ஆசிரிய நியமனம் வழங்கப்படும். (74)

**படையினரின்**

குமார்(19), ச.கண்மணிதேவி (38), ச. கமலராணி (07), ச. தனேஸவரி (24), ஐ. ரஞ்சிதமலர்(28), ஐ. குசலா(16), தி. நாகரூபன் (06), தி. மேகனாம்பாள் (16), தி. மீனாம்பாள் (10), தி. கஜேந்திரராஜா (05) ஆகியோர் காயமடைந்து யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(ப-31, 71, 74, 70)

**சார்க்...**

ஏனைய நாட்டுத் தலைவர்கள் இம் மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களில் இந்தியாவின் புதிய பிரதமர் சந்திரசேகரர் குறிப்பிடத்தக்கவர்.

## காலமானார்

### திரு. நல்லதம்பி கதிர்காமநாதன்

(Chief Clerk Port Authority, Colombo.)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், மொறட்டுவாவை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திரு. நல்லதம்பி கதிர்காமநாதன் 06-11-90 செவ்வாய்க்கிழமை அன்று காலமானார். அன்னார் மேரி றோஸினின் அன்புக் கணவரும் (அதிபர், கோவிலாக் கண்டி மகாலட்சுமி வித்தியாலயம்), பிறேமலதா (சட்டத்தரணி), சுவர்ணலதா, விஜயகுமார், விஜயநாதன், ஜெயலதா, விஜயலதா ஆகியோரின் அன்புத் தந்தையும், இ. மரியதாஸ், த. றஞ்சன் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-11-90 ல் அவரது மொறட்டுவ இல்லத்தில் நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

நாவற்குழி. தகவல்; மனைவி, பிள்ளைகள்

11079

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 16-11-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.